# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 2072/SCIC/2023**

திரு.M.தட்சிணா த/பெ.A.மாசிலாமணி
எண்.1/121, மேட்டுத் தெரு — மேல்முறையீட்டாளர்
அஞ்சூர் கிராமம் (ம) அஞ்சல்-603 204
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 14.10.2022 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 05.12.2022 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.02.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.12.2023 |
| 5 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 01.03.2023 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணைக்கு பின் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 17.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள் - செங்கல்பட்டு வட்டம், அஞ்சூர் கிராமம், புஞ்சை சர்வே எண்.211-1D-ல் 0.055 ஏர் நிலத்திற்கு தவறான பட்டா மாற்றம் செய்தது -தகவல் கோருவது - தொடர்பாக - 976-ம் பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்தவர்கள் பெயர் மற்றும் முகவரி மற்றும் மனுவில் இணைக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் கையொப்பத்துடன் தேவை” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் யாரொருவரும் ஆஜராகவில்லை. இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை ஆணையத்தின் அடுத்த விசாரணையின் போது நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. ஆணையத்தின் அடுத்த விசாரணை காணொளி காட்சி வாயிலாக நடைபெறும். அவ்விசாரணைக்கான அழைப்பாணை (1) மனுதாரர் (2) பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2072/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.தட்சிணா த/பெ.A.மாசிலாமணி
எண்.1/121, மேட்டுத் தெரு
அஞ்சூர் கிராமம் (ம) அஞ்சல்-603 204
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC